# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.242/2014</u>

2025–ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20–ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிக்கன் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>**முதல் விசாரணை:**</u>

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். முதல்தகவல்அறிக்கை நகல் ம.சா.ஆ.1, செல்வராஜின் பிரேதகூராய்வுஅறிக்கை ம.சா.ஆ.2, 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவுசான்று நகல் ம.சா.ஆ.3, 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு சான்று நகல் ம.சா.ஆ.4, வாரிசு சான்று நகல் ம.சா.ஆ.5, செல்வராஜின் ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.6, செல்வராஜ் மனைவி ஜெயலட்சுமி இறப்பு சான்று நகல் ம.சா.ஆ.7, என்னுடைய ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.8,

<u>**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**</u>:

விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. இறந்துபோன என்மகன் அவர்மகனுடன் தனியாக குடியிருந்தார். நான் தனியாக குடியிருந்தேன். விபத்து சமயத்தில் என்மகன் கிளினராக சென்றார் என்றும், ஓட்டுநராக செல்லவில்லை என்றால்சரியல்ல. ம.சா.ஆ.6 ஓட்டுநர் உரிமம் என்மகன் சென்ற லாரியை ஓட்டுவதற்கு தகுதியான உரிமம் கிடையாது என்றால் சரியல்ல. விபத்து தொழிற்சாலைக்கு உள்ளே நடந்தது என்றால் எனக்கு தெரியாது. என்மகன்

தவறி விழுந்ததாக முதல்தகவல்அறிக்கையில் உள்ளது என்றால் சரியல்ல. விபத்திற்கு லாரியின் ஓட்டுநர் காரணமில்லை என்றால் சரியல்ல. என்மகனின் வருமானத்தை அதிகப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால்சரியல்ல. விபத்து தொழிற்சாலைக்கு உள்ளே நடந்ததால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. என்மகன் அனுமதிக்கப்படாத நபராக லாரியில் சென்றால் என்றும், அதனால் காப்பீடு நிறுவனம் நஷ்டஈடுகொடுக்க கடமைப்பட்டது அல்ல என்றால்சரியல்ல. என்மகனின் வருமானத்தை சார்ந்து நான் இருக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு என்மகன் தான் காரணம் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் நஷ்டஈடுகொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் அதிகமான நஷ்டஈடு கோரியுள்ளேன் என்றும், அது கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:**</u>

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.